அதிபர்களை எல்லாம் அழைத்து வேண்டிய ஆலோசனைகள் எல்லாம் சொல்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நம்மிடம் அணுகும்போது நாம் உதவி செய்கிறோம். நாம் 'ஸிட்கோ' மூலம் உதவி செய்கிறோம்.

Open Air Jails

* 846 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the proposal to start Open Air Jails at Muthupatti village, Sigangai taluk, Ramanathapuram district and at Vengadamangalam in Chingleput district?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : இந்த ஓப்பன் ஏர் ஜெயில் கைதிகளின் மனோபாவத்தை மாற்றி அவர்களை சீர்திருத்தக்கூடிய முறையில் அமையுமா? அப்படியென்றால் கறுப்புக் குல்லாய் என்று சொல்லக்கூடிய ஒரு வகைக் கைதிகள் இருக்கிறார்களே, அவர்களையும் இந்த ஓப்பன் ஏர் ஜெயிலில் போட்டு சீர்திருத்த சர்க்கார் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நோக்கத்தோடுதான் அது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூரில் இது நல்ல முறையில் நடை பெற்று வருகிறது. ஆனால் இந்தக் கறுப்புக் குல்லாய் இப்போது கிடையாது. கறுப்புக் குல்லாய் இப்போது போடுவது கிடையாது. வெள்ளைக் குல்லாய் இருந்ததையும் நம் அரசு வந்ததற்குப் பின்னால் எடுத்துவிட்டோம். அவர்கள் சொன்ன வார்த்தை, நிரந்தரமாக இந்தத் திருட்டுத் தொழில் செய்பவர்களுக்குச் சொல்கிற வார்த்தையாகும். சேலத்தில் மட்டும்தான் அந்தக் கைதிகளை வைத்திருக்கிறார்கள். இங்கு இருப்பதாக நான் ஒத்துக்கொள்ளவில்லை. சேலத்தில் மட்டும்தான் அந்தக் கைதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க முடியுமா என்பது பரிசீலிக்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : இந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் இரண்டு இடங்களில் ஆரம்பிப்பதற்கு உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள். எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள

1974 ஏப்ரல் 17]

சிறைச்சாலைகளிலும் இம்மாதிரியான திறந்தவெளிச் சிறைச் சாலைகள் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த யோசனைதான். எந்தெந்த மாவட்டங்களில் பெரிய சிறைச்சாலைகள் இருக்கின்றனவோ அவற்றிற்கு அருகில் பத்து பதினைந்து மைல்களுக்குள்ளாக ஏராளமான நிலம் இருக்குமானால் அந்த இடத்தைப் பார்க்கும்படி எல்லா மாவட்ட சிறைச்சாலைகளினுடைய தலைவர்களையும் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. கா. வேழவேந்தன் : ஆய்வில் இருக்கிற திறந்தவெளிச் சிறைச்சாலைகள் அமைகிற முறையில், சென்னைக்கு 12 மைல் தூரத்தில் புழலேரி, செங்குன்றம் பகுதிகளில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் வேண்டிய நிலம் இருக்கின்றது. எற்கனவே அதை அரசைச் சேர்ந்தவர்கள் பார்த்திருக்கிறார்கள். அந்த ஆய்வு என்னவாயிற்று ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த புழலேரிப் பகுதியிலுள்ள மாற்று இடத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான செலவு வருகிறது என்ற அச்சத்தால் அது அப்படியே நிற்கிறது.

திரு. கோவை செழியன் : இந்தத் திறந்தவெளிச் சிறைச் சாலையில் கோபத்தால் கொலை செய்த கொலைக் கைதிகள், நீண்ட நாட்களாகவுள்ள ஆத்திரத்தால் குற்றம் செய்த இந்தமாதிரியான குற்றவாளிகளை அங்கே வைத்து தினசரி அவர்களுக்கு நல்ல சொற்பொழிவுகள் உபன்யாசங்கள் எல்லாம் நடத்திக் கொடுத்து அவர்களது மனதை மாற்றலாம், நல்ல சினிமாக்களைக் காட்டலாம். "தோ ஆங்கேன் பாரா ஹாத்" என்ற படத்தில் குற்றவாளி மனத்தை மாற்றுவதாக வருகிறது. எனவே அப்பேர்ப்பட்ட நல்ல நடவடிக்கைகள் மூலம் அவர்களை சீர்திருத்தம் செய்து, அன்பான முறையில் சீர்திருத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது தமிழ் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் அவர்கள் சொன்னதுபோல் நல்ல கருத்துள்ள படங்களை நாம் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். திறந்தவெளிச் சிறைச்சாலையில் அதைவிட ஒரு

மாபெரும் இயக்கமாக, தங்களுடைய கிராமங்களில் வாழ்வதைப் போல் அமைத்து விவசாயத்தில் ஈடுபடச் செய்து ஒரு சிறையில் இருப்பதுபோல் ஒரு எண்ணம் ஏற்படாது பாதுகாப்பதுதான் இதன் நோக்கம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சிறைக் கைதிகளை அடிக்கடி குற்றம் செய்துவிட்டு சிறைக்குச் செல்பவர்களை யும் புதிதாக ஒரு தடவை ஏதோ தவறுதல் காரணமாக மாட்டிக் கொண்டு சிறை செல்பவர்களையும் ஒன்ருகச் சேர்த்து வைப்பதில் புதிதாக சிறை செல்பவர்களை உள்ளே இருக்கக்கூடிய ஜெயில் பேர்ட்ஸ் கடும் கிரிமினல்ஸ்-ஆக மாற்றிவிடுகிருர்கள். மாற்றி அவர்களையும் தங்கள் சகாக்களாக ஆக்கி அதிகக் குற்றங்கள் செய் வதற்குத் தூண்டுகிற முறையில் இன்றைய தினம் இருக்கக்கூடிய அமைப்பு இருக்கிறது. எனவே இவர்களைத் தனித்தனியாகப் பிரித்துப் பாகுபடுத்தி, அடிக்கடி குற்றம் செய்து ஜெயிலுக்கு வரும் பெரிய குற்றவாளிகளை ஒரு பக்கம், இப்போது முதல் தடவையாக கன்விக்ட் செய்யப்பட்டு வருகிற கைதிகளை ஒரு பக்கம் என்று பாகுபடுத்தித் தனித்தனியாக வைத்தால் சிறைச் சாலைகள் அபிவிருத்தி செய்ய முடியும் அல்லவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கருத்தின் அடிப்படை யில்தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் முன்கூட்டியே பழனிசாமி அவர்கள் கேட்டார்கள். சேலம் சிறைச்சாலையில் அடிக்கடி குற்றம் செய்பவர்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கிருர்கள். மற்ற சிறைச்சாலைகளில் அவர்கள் இருக்கமுடியாது என்று நான் கருதுகிறேன். அப்படி ஏராள மான குற்றங்கள் செய்தவர்கள் இருப்பார்களேயாளுல் பெரும் பாலும் அவர்கள் சேலம் சிறைச்சாலைக்கு மாற்றப்படுகிருர்கள்.

திரு. த. சோணையா : இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை வட்டத்திலுள்ள முத்துப்பட்டிக் கிராமத்தில் கட்டப்படுகிற திறந்த சிறைச்சாலையில் அந்தக் கைதிகளை விவசாயத்தில் ஈடு படுத்த நிலம் சுமார் எவ்வளவு கிடைக்கும் என்று அறிவிப்பார் களா ?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைச்சாலை கட்டப்படவில்லை. விவசாயம் செய்வதற்கு நிலம் கிடைக்குமா என்று பார்த்து, எந்த இடத்தில் இந்தச் சிறைக் கைதிகளை வைக்கலாம் என்பதுதான் யோசனை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது சொன்னார்கள், சிறைச்சாலையில் இருப்பதைப் போன்ற உணர்வு இல்லாத முறையில் அவர்களை வைத்து இருப்பது தான் இந்த அரசின் நோக்கம் என்று சொன்னார்கள். குற்றம் செய்பவர்களைத் திருத்துவதற்காக அல்லது அவர்களுக்கு ஒரு தண்டனை கொடுப்பதன் மூலம் மற்றவர்கள் அப்படிப்பட்ட குற்றங்களைச் செய்யாமல் இருப்பதற்கான வகையில்தான் சிறைச்சாலை என்ற முறை ஏற்படுத்தப்பட்டது. ஆகவே சிறையில் இருக்கிறார்கள் என்ற உணர்வே இல்லாமல் அவர்களுக்கு ஒரு சுகவாழ்வு ஏற்படுத்தித் தந்தால் குற்றவாளிகளின் எண்ணிக்கை பெருகுமே, குற்றம் இழைப்பது ஒரு பெரிய கேடு என்று நினைப்பது மாறாதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினரின் கருத்து பழமையான கருத்து. இப்போது உலகமே மாறி விட்டது. சிறைச்சாலைகளில் பழி வாங்கவேண்டுமென்ற அடிப்படை கிடையாது. கட்டுப்பாடு உணர்வு கொண்டு அங்கே அவர்கள் விவசாயம், மற்ற தொழில்கள் செய்வது என்ற முறையில் செய்து வருகிறார்கள். பழி வாங்கும் எண்ணம் பழமையான கருத்து. இப்போது அது இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, தஞ்சாவூரிலுள்ள திறந்தவெளிச் சிறைச்சாலை நல்ல முறையில் இயங்கி வருவதாகச் சொல்லப்படுகிறது. அதை அனுபவமாகக் கொண்டு இந்த மாநிலத்தின் மத்திய சிறைச்சாலைகள் பக்கத்திலே அம்மாதிரியான திறந்தவெளிச் சிறைச்சாலைகளை அமைக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே ஒப்புக் கொண்டேன், தஞ்சாவூர் மாவட்டத்தில் நல்ல முறையில் நடை பெற்று வருகிறது என்று. அந்த அடிப்படையில் எல்லா மாவட்டங்களிலும் திறப்பதற்குப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, திறந்த வெளி சிறைச்சாலையில் உள்ளவர்கள் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ளாவிட்டாலும் வெளி உலகத்தைப் பார்த்து ஏங்கி, வெளி உலகத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு திருந்துவதற்கு வழியேற் படும். கட்டுப்பாடான சிறைச்சாலைக்குள் இருந்தால் வெளி உலகத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடியாத நிலைமை இருக் கிறது. தனியாக அவர்களைப் பிரித்துவைத்தமாதிரி இருக்கும். திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருந்தால் மனம் மாறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, பெரிய சிறைச்சாலைகளில் திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்க, சீக்கிரமாக உண்டாக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் இப்போது சொன்னேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கோவை செழியன் அவர்கள் கேள்வி கேட்டபோது "தோ ஆங்கேன் பாரா ஹாத்" போன்ற படங்களைக் காட்டி கைதிகளைத் திருத்தமுடியும் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்கும் அளவுக்குச் சொன்னார்கள். தமிழ்ப்படங்களைப் பார்த்தே திருந்தாத கைதிகள், இந்தியில் வரும் அந்த ஆபாசப் படங்களைக் காட்ட ஆரம்பித்தால், தமிழ்நாட்டின் நாகரிகம் கெட்டு விடும். ஆகவே, தமிழ்ப்படங்களை மட்டும் காட்ட அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் அந்தப் படத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நல்ல கருத்துள்ள படங்கள் காட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு, நடைமுறை செய்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நண்பர் வீரா சாமி அவர்கள் 'தோ ஆங்கேன் பாரா ஹாத்' படம் பார்த்து இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அது நல்ல கருத்துள்ள படம். அந்தமாதிரி கருத்துள்ள படங்களைக் கைதிகளுக்குக் காட்டுவதற்கு அரசு முன் வருமா ?

(விடை இல்லை)